QP.No. : BB 701 **FSLA**

B.Sc. B.Ed. DEGREE (4-Year Integrated) EXAMINATION
MARCH 2025.

(For the Candidates admitted during the Academic Year
2017–2018 onwards)

First Semester

GENERAL TAMIL — I

Time : 3 hours Maximum Marks : 70

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. உழைச்சவன் வீட்டில் பசி வந்திடக் காரணம் என்ன?

2. பாரதிதாசன் பார்வையில் அழகு இருக்குமிடம் இரண்டினைக் கூறுக.

3. நெருப்பின் கிளை என்னும் கவிதையை எழுதியவர் யார்?

4. தமிழன்பனின் ஒரு வண்டி சென்ரியு கவிதை ஒன்றினை எழுதி, பொருளுரைக்க.

5. தமிழ் நாடகத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?

6. தமிழில் தோன்றிய முதல் புதினம் எது?

7. நுமக்குப் பாடமாகவுள்ள தன் முன்னேற்ற நூலின் பெயரைக் கூறுக.

8. பொருந்திய சொல் தருக.

   நெருப்பு-கனல், புனல், உன்னல்

9. எழுத்துப்பிழை நீக்கி எழுதுக.

கண்டதைப் படித்தாள் பன்டிதன் ஆகலாம்

10. நுமக்குத் தெரிந்த மரபுத் தொடர் ஒன்றினை வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.

பகுதி ஆ — ($5 \times 4 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

11. ‘தூங்காதே தம்பி தூங்காதே’ என்று பட்டுக்கோட்டையார் கூறுவதன் காரணத்தினைப் புலப்படுத்துக.

12. ‘ஒரு கிராமத்து நதி’ கவிதையின் வழி சிற்பி பாலசுப்ரமணியம் உணர்த்தும் கருத்துக்களைச் சுருக்கியுரைக்க.

13. கவியரசு கண்ணதாசனின் தனித்தன்மைகளைப் பட்டியலிட்டுக் காட்டுக.

14. தன்னம்பிக்கை நூல்களில் வெற்றிப்படிகள் நூலின் இடம் யாது?

15. பின்வரும் கலைச்சொற்களைத் தமிழ்ப்படுத்துக.

(அ) Adult Education

(ஆ) You Tube

(இ) Political Science

(ஈ) Allergy

பகுதி இ — ($5 \times 8 = 40$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க.

16. சேவகனின் செயல்பாடுகளைப் பாரதியார் எவ்வாறு காட்சிப்படுத்தியுள்ளார்?

17. புதுநாளினை எண்ணி உழைப்பதற்குப் பட்டுக்கோட்டையார் விடுக்கும் அறைகூவலை வரிசைப்படுத்தி எழுதுக.

18. அறிவுமதியின் ஹைகூ கவிதைகள் சிலவற்றைக் கூறி விளக்குக.

19. எமன் வேலையைச் சிகரெட் செய்யும் என்பதை வைரமுத்து எங்ஙனம் சுட்டிக் காட்டியுள்ளார்?

20. புதுக்கவிதையின் இலக்கணம் கூறி, மூன்று கவிஞர்களின் இலக்கியப் பங்களிப்பை எடுத்துரைக்க.

21. வரலாற்று நாவல்களில் கல்கியின் பங்களிப்பு குறித்து விரிவாக எழுதுக.

22. மானுட வெற்றிக்கு வெற்றிப்படிகள் என்னும் நூல் துணைநிற்கும் என்பதனை ஆய்க.

23. உழைப்பால் உயர்ந்த ஒருவரை நேர்காணல் செய்க.